KANTON AARGAU

**DEPARTEMENT**
**GESUNDHEIT UND SOZIALES**
Abteilung Gesundheit

**Andreas Obrecht**
Leiter Covid-19 Programm
Bachstrasse 15, 5001 Aarau
Telefon zentral 062 835 29 60
www.ag.ch/dgs

28 ஜூன் 2021

**12 வயது மற்றும் அதிக வயதுடைய குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினருக்கு கோவிட்-19 தடுப்பூசி போடுதல்**

அன்புள்ள பெற்றோர்களே,

தற்போதைய நிலவரப்படி, 12 வயது மற்றும் அதிக வயதுடைய குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினருக்கு ஃபைசர்/பயோஎன்டெக் (Pfizer/BioNTech)ஆகிய தடுப்பூசிகளைப் பயன்படுத்தி கோவிட்-19க்கு எதிராக தடுப்பூசி போடுவதும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. வைரஸ் மேலும் பரவுதலைத் தடுப்பதற்கு, இவர்களில் கூடுமான எண்ணிக்கையிலானவர்களுக்கு தடுப்பூசி போடுவது முக்கியமாகும்.

நீங்களும், 12 வயதுக்கு மேற்பட்ட உங்கள் குழந்தையும், ஆர்காவ் கேண்டெனில், கட்டணமில்லாமல் தடுப்பூசி போட்டுக்கொள்ளலாம். தற்போது, ஆர்காவ் கேண்டென் மருத்துவமனை (KSA) மற்றும் படேன் கேண்டென் (KSB படேன் தலம்) மருத்துவமனையின் தடுப்பூசி மையங்கள் குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினருக்கு அங்கீகரிக்கப்பட்ட ஃபைசர் தடுப்பூசியை வழங்குகின்றன. 12 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினரும் அங்கு முன்பதிவின்றித் தடுப்பூசி போட்டுக்கொள்ளலாம்.

பொதுச் சுகாதார மத்திய அலுவலகம் (FOPH) கூறுவதன்படி, தடுப்பூசி குறித்து தாங்களாகவே முடிவெடுக்கும் உரிமை 12 வயதுக்கு மேற்பட்ட இளம்பருவத்தினருக்கு இருக்கிறது, அவ்வாறு முடிவெடுக்கும் திறன் அவர்களுக்கு இருக்கும்பட்சத்தில். எனவே, பெற்றோர்கள் ஒப்புதல் அறிவிப்பு வழங்குவது அத்தியாவசியமில்லை. இருப்பினும், தொடக்கப் பள்ளி வயதுக் குழந்தைகளுக்கு அவர்களின் பெற்றோருடன் கலந்தாலோசித்து தடுப்பூசிபோடுவது அறிவுறுத்தப்படுகிறது. சாத்தியமானால், உங்களுடைய பள்ளி வயதுக் குழந்தையுடன் நீங்களும் தடுப்பூசி மையத்துக்குச் செல்வதை ஆர்காவ் கேண்டென் பரிந்துரைக்கிறது.

தடுப்பூசி மையத்தில் எவ்வாறு தடுப்பூசி போடப்படுகிறது என்பதை படேன் தடுப்பூசி மையத்தைச் சேர்ந்த நினா ஒரு சிறிய காணொளிமூலம் விளக்குகிறார்.

தடுப்பூசி குறித்த மேலதிகத் தகவல்கள், இரண்டு தடுப்பூசி மையங்களின் திறக்கும் நேரம் மற்றும் பிற தகவல்களை, பல மொழிகளில் நீங்கள் பின்வரும் இணைய முகவரியில் கண்டறிய இயலும் www.ag.ch/coronavirus-impfung.

வணக்கத்துடன்

Andreas Obrecht
கோவிட்-19 திட்டத் தலைவர்